2002 மார்ச் 28]

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளாத்திகுளம் தொகுதி மிகவும் பின்தங்கிய, வானம் பார்த்த, விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்கள் உள்ள தொகுதி. ஆகவே, அங்கே மகளிர் உயர் கல்வியைப் பெறவேண்டுமென்றால் அருப்புக்கோட்டை, சிவகாசி, தூத்துக்குடி போன்ற பெருநகரங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலோடு அடுத்த ஆண்டில் சேர்த்துக்கொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து நிதிநிலைக்கு ஏற்றவாறு பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

33—

சட்டக் கல்லூரி

***854—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் நடப்பாண்டில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்படுமா?

(ஆ) அதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே வேலூரில் புதிதாக ஒரு சட்டக் கல்லூரி தொடங்க உள்ளது என்று ஏற்கெனவே மிகத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. சட்டக் கல்வித் துறை என்கிற தலைப்பின்கீழ், சட்டக் கல்வித் துறையின்கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய 5 இடங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. வேலூரில் புதிதாக ஒரு

சட்டக் கல்லூரி தொடங்கப்பட உள்ளது என்று ஏற்கெனவே அரசு அறிவித்த ஒன்றை, இப்போது வினாவே எழவில்லை என்று அமைச்சர் கூறுவது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இப்படி இந்தத் துறை அமைச்சருக்கு ஒரு தவறான தகவலைத் தந்து, ஒரு தவறான தகவலை அவைக்குத் தருவதோடு மட்டுமல்லாமல் பெரிய குழப்பத்தையே உருவாக்குவதுபோல் இது இருக்கிறது. வேலூர் மக்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அந்த சட்டக் கல்லூரி வரும், வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். 2000 ஆம் ஆண்டில், அதற்கான இடத்தைக்கூட கலெக்டர் 5 இடங்களிலே வாடகைக்கு பார்த்து சட்டக் கல்லூரியைத் தொடங்குவதற்கான நடவடிக்கையை எடுத்தார்கள். ஆனால் அரசாணை பிறப்பிக்கக்கூடிய கால கட்டத்தில் அந்த அரசு முடிந்து வேறு ஓர் அரசு அமைந்திருக்கிறது. அந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்கெனவே எடுத்த அந்தக் கொள்கை முடிவை இந்த அரசும் தொடர்ந்து செய்து, அந்த இடத்திலே சட்டக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா? தவறு செய்த அந்தத் துறை அதிகாரிகள்மீது அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இதுபற்றி ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ** (குறுக்கீடு) அறிவிப்பு கொடுத்தார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள், கேள்விக்கான பதில் மட்டும் போதும், மற்றவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: வேலூரிலே சட்டக் கல்லூரி வரும் என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே அவர்கள் சொன்னது 2000 ஆம் ஆண்டு. அப்போது யாருடைய ஆட்சி நடைபெற்றது என்பது நிச்சயமாகத் தெரியும். ஆனால் இப்போதுள்ள நிதிச் சூழ்நிலையில் ஒரு கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்றால் தொடர் செலவினம் 16 இலட்சம், தொடராச் செலவினம் 10 இலட்சம் ஆகும். எனவே இப்போது இருக்கின்ற நிதிச் சுமையைக் கருத்தில்கொண்டு இப்போது வினா எழவில்லை என்றுதான் சொன்னேனேயொழிய, எப்போதும் இல்லை என்று சொல்லவில்லை. நிதிச்சுமை சீரடைந்தவுடன் இதுபற்றி யோசிக்கலாம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடரும், தொடராச்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2002 மார்ச் 28]

செலவினங்களுக்கு 26 இலட்ச ரூபாய் தேவைப்படுகிறது; ஆகவே இந்த ஆண்டு இல்லை என்ற முறையிலே அவைக்கு இப்போது தகவல் தந்திருக்கிறார்கள். அமைச்சர் வேண்டுமென்று சொன்னால் — என்னுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு வளர்ச்சி நிதியைக்கூட, அப்படியே இந்த 26 இலட்சத்தை நான் கொடுக்கிறேன். நடப்பு ஆண்டிலே இந்த சட்டக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர் செலவினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் 16 இலட்ச ரூபாய்; ஆயுள் முழுவதும் ஞானசேகரன் கொடுப்பாரானால் அதுபற்றி யோசிக்கலாம்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 34, திரு. என். நன்மாறன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். (குறுக்கீடு) இல்லை, சட்டக் கல்லூரி வேலூரோடு முடியட்டும்.

34—

மதுரை மாரியம்மன் தெப்பக்குளம்

***1118—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் தூர்வாரி நிரந்தரமாகத் தண்ணீர் மற்றும் படகு விடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் உபகோயிலான மதுரை அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான மேற்படி திருக்கோயிலுக்கு அருகிலுள்ள